ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 23.08.2019 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.5-2019
## இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை குறைத்திருக்கின்றது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2019 ஓகத்து 22ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் 50 அடிப்படை புள்ளிகளால் முறையே 7.00 சதவீதம் 8.00 சதவீதமாக குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. நாணயச் சபையானது உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் நிதியியல் சந்தைகளிலும் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரத்திலும் தற்பொழுது காணப்படுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளை மிகக் கவனமாக பகுப்பாய்வு செய்தமையினைத் தொடர்ந்து தற்போது நிலவும் தாழ்ந்த பணவீக்கம் மற்றும் விரும்பத்தக்க 4-6 சதவீத வீச்சில் சிறந்த முறையில் நிலைப்படுத்தப்பட்ட நடுத்தர கால பணவீக்கத் தோற்றப்பாடு காணப்படும் சூழலில் பொருளாதாரச் செயற்பாடுகளின் மீளெழுச்சிக்கு மேலும் ஆதரவளிக்கும் நோக்கத்துடன் இத்தீர்மானத்திற்கு வந்துள்ளது.

**மெதுவான உலகளாவிய பொருளாதார செயற்பாடு பல நாடுகளில் அவற்றின் நாணயக் கொள்கைகளை தளர்த்துவதற்கு தூண்டியிருக்கிறது**

வர்த்தகப் பதற்றங்கள் மற்றும் பூகோள அரசியல் அபிவிருத்திகள் போன்றவற்றில் இருந்து தோன்றும் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக உலகளாவிய கேள்வி நலிவடைவதற்கு மத்தியில் முன்னேற்றம் கண்ட மற்றும் தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலுள்ள பல மத்திய வங்கிகள் உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்திருந்ததுடன் அண்மைக் காலத்தில் அவற்றின் நிலைப்பாடுகள் தொடர்ந்து தளர்த்தப்பட்டிருப்பதற்கான சமிக்ஞை காட்டியிருந்தன. இப்பொருளாதாரங்களின் முடக்கப்பட்ட பணவீக்கம் மற்றும் பணவீக்கத்தோற்றப்பாடு இத்தகைய தீர்மானங்களுக்கு சாதகமாக செயற்பட்டுள்ளன.

**பணவீக்கம் நடுத்தர காலத்தில் நடுஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்திருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கங்கள் மிதமடைந்த உணவு விலைகளினால் பகுதியளவில் உந்தப்பட்டு அண்மிய மாதங்களில் தாழ்ந்ததாக தொடர்ந்திருந்தன. எரிபொருள் விலைகள் அதேபோன்று நிர்வாக ரீதியில் தீர்மானிக்கப்படுகின்ற குறிப்பிட்ட பண்டங்களின் விலைகளின் அண்மைய மேல்நோக்கிய திருத்தங்கள் அண்மைக்காலத்தில் சில தற்காலிக விலை அழுத்தங்களை தோற்றுவிக்கக் கூடுமெனினும் பணவீக்கம் 2019இன் எஞ்சிய காலப்பகுதியில் விரும்பத்தக்க பணவீக்க இலக்கு வீச்சான 4-6 சதவீதத்தின் தாழ்ந்த மட்டத்தில் தொடர்ந்துமிருக்கும். சிறந்த முறையில் நிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் பொருத்தமான காலக்கிரமத்துடனான கொள்கை வழிமுறைகளுடன் நடுத்தர காலத்தில் பணவீக்கம் விரும்பத்தக்க வீச்சினுள் பேணப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**மோசமான உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளால் பொருளாதார வளர்ச்சி பாதிப்படையக்கூடும்**

நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் மற்றும் முதன்மையான குறிகாட்டிகளில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகள் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ஒரு மிதமான பொருளாதார வளர்ச்சியை சுட்டிக்காட்டியிருக்கின்றன. நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சி அதன் உள்ளார்ந்த ஆற்றலை நோக்கி படிப்படியாக மீட்சியடைவதற்கு எதிர்பார்க்கின்ற போதிலும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய எதிர்விசைகள் இம்மீட்சியை தாமதப்படுத்தக்கூடும். எனவே, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு தொடர்பில் அடையப்பட்ட மேம்பாடுகளைப் பாதிக்காதவண்ணம் உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு கிடைக்கக்கூடிய கொள்கை இடைவெளிகளை பயன்படுத்துவது இன்றியமையாததாகும்.

**ஒரு மேம்பட்ட வர்த்தக நிலுவையினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுத் துறை தொடர்ந்து தாக்குபிடிக்கும்தன்மையுடன் காணப்படுகின்றது**

ஏற்றுமதிகளின் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சி மற்றும் இறக்குமதிகளின் வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க சுருக்கம் என்பனவற்றுடன் 2019இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப்பற்றாக்குறை தொடர்ச்சியாக மேம்பட்டிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் தாக்கமடைந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை யூன் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக மீட்சியடைந்து வருகிறது. ஆண்டின் முதலரைப்பகுதியில் ஒன்றுசேர்ந்த மிதமடைதல் அவதானிக்கப்பட்ட போதிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் யூனில் சிறிதளவு வளர்ச்சியை பதிவுசெய்திருந்தது. அதேநேரம் ஆண்டின் இதுவரை காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல் மற்றும் முதன்மை உட்பாய்ச்சல்கள் உள்ளடங்கலாக பங்கு சந்தையின் தேறிய உட்பாய்ச்சல்களுடன் வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் கலப்பாகவிருந்தன. கடந்த சில தினங்களில் சில தேய்வடைவதற்கான அழுத்தங்களை அனுபவித்திருந்த போதிலும், இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக ஆண்டின் இதுவரை 2.4 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. முக்கியமாக சில முதலீட்டாளர்களின் அரச பிணையங்கள் சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு மீள்பெறுகைகளால் உந்தப்பட்ட தேய்வடைவதற்கான அழுத்தங்கள் குறுகிய ஆயுளைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை 2019 யூலை இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 8.3

பில்லியன் ஐ.அ.டொலர்களில் மதிப்பிடப்பட்டதுடன் 5.0 மாதங்களுக்கான இறக்குமதி காப்பினை வழங்குகின்றன.

**நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்கள் மேலும் மிதமடைந்தன**

2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி தொடர்ச்சியாக மெதுவடைந்திருந்தது.. அதற்கிணங்க தனியார் துறை கொடுகடனின் முழுமையான அதிகரிப்பு 2018 தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மட்டத்தைவிட மிகக் குறைவாகத் தொடர்ந்திருந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணங்கள் மீதான காலாண்டு அளவீட்டின் அடிப்படையில் விவசாயம், கைத்தொழில் மற்றும் பணிகள் என்பனவற்றிற்கான கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2019 இரண்டாம் காலாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்திருந்த வேளையில் தனியாள் கடன் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சி உயர்வடைந்தது. இக்காலப்பகுதியில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வீழ்ச்சி ஒட்டுமொத்த நாணயக்கூட்டுக்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

**சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் ஒரு விரைவான குறைவு பொருளாதார நடவடிக்கையின் மீளெழுச்சிற்கு தேவைப்படுகின்றது**

2019 மேயில் 50 அடிப்படைப் புள்ளிகளினாலான கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு மற்றும் 2018 நவெம்பர், 2019 மாச்சில் இரண்டு படிமுறையில் மேற்கொள்ளப்பட்ட 2.50 சதவீதப் புள்ளிகளிலான நியதி ஒதுக்குவிகிதத்தின் குறைப்பின் ஊடாக திரவத்தன்மை நிலைமைகளின் மேம்பாடுகளைப் பதிலிறுத்தும் வகையில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம் குறிப்பிடத்தக்களவு குறைவினைக் காட்டியிருந்தது. கடந்த சில தினங்களில் சில உயர்வுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் ஆண்டு காலப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவுகள் கணிசமான அளவு குறைந்திருந்தன. நாணயக் கொள்கை பரிமாற்றத்தினை விரைவுபடுத்தும் நோக்கில் நிதியியல் நிறுவனங்களின் வைப்பு வட்டி வீதங்களின் மீதான அதியுச்ச மட்டத்தின் பிரயோகம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதத்தின் குறைவுடன் இணைந்து இந்நிறுவனங்களின் நிதிக் கிரயத்தின் விரைவான குறைவுக்கு வழிவகுத்தது. எனினும், சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்திருந்த போதிலும் வைப்பு வட்டி வீதங்களில் அவதானிக்கப்பட்ட குறைவிற்கு ஈடாக சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் உள்ளடங்கலான அனைத்து சந்தைக் கடன்வழங்கல் வீதங்களும் ஒரு கீழ்நோக்கிய சீராக்கத்தை இன்னமும் காட்டவேண்டியிருக்கின்றது. வங்கி மற்றும் வங்கியல்லா நிறுவனங்கள் அவற்றின் குறைக்கப்பட்ட நிதிக்கிரயத்தை பதிலிறுத்தும் வகையில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களைக் குறைப்பது இன்றியமையாததாகின்றது. இதன்மூலமாக உற்பத்தித் திறன் வாய்ந்த துறையில் கொடுகடன் பாய்ச்சலை உயர்த்துவதற்கும் பொருளாதாரத்தின் மீளெழுச்சிற்கும் உதவக்கூடியதாகவிருக்கும்.

**நாணயக்கொள்கை தீர்மானமானது சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் ஒரு விரைவான குறைப்பினை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

மேற்குறிப்பிடப்பட்டவாறு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2019 ஓகத்து 22ஆம் நாளன்று இடம்பெற்ற

அதனது கூட்டத்தில் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு தேவையெனும் நிலைப்பாட்டினை கொண்டிருந்தது. அதன்படி நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பனவற்றை 50 அடிப்படை புள்ளிகளால் முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.00 சதவீதமாக குறைப்பதற்கு தீர்மானித்திருந்தது. இத்தீர்மானத்தினால் ஆதரவளிக்கப்பட்டு மத்திய வங்கியானது ஏற்கனவே அவதானிக்கப்பட்ட வைப்பு வட்டி வீதங்களின் குறைவுடன் இசைந்து செல்லும் விதத்தில் அனைத்து சந்தைக் கடன்வழங்கல் வீதங்களும் குறைவடையுமென எதிர்பார்த்திருக்கின்றது. சந்தை வட்டி வீதங்களின் அபிவிருத்தியினை மத்திய வங்கி தொடர்ந்தும் கவனமாக கண்காணிப்பதுடன் குறிப்பிட்ட நேர வரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் உணரப்படாவிட்டால் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் மீது பொருத்தமான அதியுச்ச மட்டத்தின் பிரயோகத்தினை விதந்துரைக்கும். இத்தகைய நேர வரையறைகள் மற்றும் வழிமுறைகள் பொருத்தமான ஆர்வலர்களினூடான ஆலோசனைகளுடன் குறுகிய காலத்தில் அறிவிக்கப்படும்.

மொத்தமாக 2.50 சதவீத புள்ளிகளினால் ஆன இரண்டு நியதி ஒதுக்குவிகிதக் குறைப்புகள் மற்றும் கொள்கை வட்டி வீதங்களின் இரண்டு கீழ்நோக்கிய சீராக்கங்களுடன் கொள்கை வீத வீச்சினை 8.00-9.00 சதவீதத்திலிருந்து 7.00-8.00 சதவீத குறைவிற்கு நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டிருக்கின்றது. நாணயச் சபையானது முன்னோக்கிச் செல்லுகையில் நாணயக் கொள்கையின் எதிர்காலப் போக்கினை தீர்மானத்திருப்பதற்கு முன்னர் இவ்வழிமுறைகளின் தாக்கம் அதேபோன்ற இறைச் செயலாற்றம் மற்றும் உலகளாவிய அபிவிருத்திகள் போன்றவற்றை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

**நாணயக் கொள்கை தீர்மானம்: கொள்கை வட்டிவீதங்கள் குறைக்கப்பட்டதுடன் நியதி ஒதுக்குவீதம் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 5.00% |

**தகவல் குறிப்பு:**

பத்திரிகை மாநாடு, ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடன் 2019 ஓகத்து 23ஆம் திகதியாகிய இன்று மு.ப 11.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2019 ஒத்தோபர் 11ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | திசெ 18 | சன 19 | பெப் 19 | மாச்சு 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு(2013=100) | 2.8 | 3.7 | 4.0 | 4.3 | 4.5 | 5.0 | 3.8 | 3.3 |
| | தேநுவிசு(2013=100) | 0.4 | 1.2 | 2.4 | 2.9 | 3.6 | 3.5 | 2.1 | 2.2 |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு(2013=100) | 3.1 | 5.5 | 5.4 | 5.6 | 5.5 | 6.2 | 5.8 | 5.7 |
| | தேநுவிசு(2013=100) | 3.1 | 5.1 | 5.5 | 5.8 | 6.3 | 6.3 | 6.1 | 6.1 |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 | மாச் 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 |
| ஒதுக்குப் பணம் | 963 | 924 | 849 | 875 | 888 | (3.4) | (7.6) | (12.7) | (12.4) | (11.3) |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 7,253 | 7,295 | 7,295 | 7,338 | 7,355 | 9.8 | 9.0 | 9.4 | 8.7 | 8.2 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 23 | 110 | 103 | 99 | 105 | (78.2) | (7.6) | 38.3 | (2.2) | (39.0) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,230 | 7,185 | 7,192 | 7,239 | 7,251 | 11.2 | 9.3 | 9.0 | 8.9 | 9.5 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,613 | 2,584 | 2,594 | 2,667 | 2,703 | 14.7 | 11.3 | 11.6 | 17.3 | 21.4 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 703 | 726 | 726 | 730 | 729 | 26.2 | 24.9 | 19.4 | 17.9 | 14.6 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,588 | 5,544 | 5,542 | 5,605 | 5,604 | 11.3 | 9.9 | 9.2 | 8.7 | 7.7 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,902 | 8,968 | 8,980 | 9,051 | 9,082 | 9.7 | 9.1 | 9.4 | 9.2 | 9.0 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | சன 19 முடிவில் | பெப் 19 முடிவில் | மாச் 19 முடிவில் | ஏப் 19 முடிவில் | மே 19 முடிவில் | யூன் 19 முடிவில் | யூலை 19 முடிவில் | 2019 ஓகத்து 22 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 | 8.00 | 8.00 | 8.00 | 7.50 | 7.50 | 7.50 | 7.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.00 | 9.00 | 9.00 | 9.00 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 9.00 | 8.96 | 8.51 | 8.49 | 7.94 | 7.86 | 7.70 | 7.75 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | | |
| 91-நாள் | - | 9.55 | 9.39 | 8.89 | 8.52 | 8.24 | 7.85 | 7.84 |
| 182-நாள் | 9.87 | 9.87 | 9.67 | 9.09 | 8.63 | 8.49 | 7.94 | 7.89 |
| 364-நாள் | 10.69 | 10.67 | 10.40 | 9.81 | 8.88 | 8.70 | 8.21 | 8.31 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வராந்தம்) | 12.27 | 12.51 | 12.23 | 12.20 | 11.82 | 11.52 | 10.89 | 10.77 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.44 | 14.48 | 14.49 | 14.47 | 14.48 | 14.36 | 14.22 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.41 | 14.60 | 14.56 | 14.62 | 14.59 | 14.35 | 13.88 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.85 | 8.88 | 8.98 | 8.97 | 9.00 | 8.94 | 8.88 | 8.73 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.91 | 10.96 | 11.11 | 11.15 | 11.19 | 11.07 | 10.97 | 10.74 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.21 | 11.13 | 11.42 | 11.24 | 10.05 | 9.85 | 8.58 | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*